# உயிர்த்தெழுதல் எதை அறிவிக்கிறது?

*இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்பவை நமது விசுவாசம் மற்றும் தேவனுடனான நமது உறவு ஆகியவற்றிற்கு இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளன (1 கொரி. 15:1-4). ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள்தோறும், நாம் கர்த்தருடைய பந்தியைச் சுற்றிக் கூடிவருகையில்,[1] நாம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த் தெழுதல் ஆகியவற்றை ஆசரிக்கின்றோம்/கொண்டாடுகின்றோம். இப்போது நாம், இவற்றில் மூன்றாவது கருத்தான உயிர்த்தெழுதல் என்பதன்மீது நமது சிந்தனைகளை மையப்படுத்துவோம். ''உயிர்த் தெழுதலின் தனிச்சிறப்பு என்ன?'' மற்றும் "இந்த மாபெரும் நிகழ்ச்சி எதை அறிவிக்கிறது?'' என்பவை போன்ற கேள்விகளுக்குப் பதில் அளிக்க விரும்புகின்றோம். இங்கு இதன் அடிப்படைச் செய்திகள் சில உள்ளன.*

## இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார்

*உயிர்த்தெழுதல் என்பது முதலாவது, இயேசுவின் தெய்வீகத்துவத்தை அறிவிக்கிறது. ரோமர் 1:5ல் பவுல், "... பரிசுத்தமுள்ள ஆவியின்படி, தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்'' என்று அவரைப் பற்றிக் கூறினார். உயிர்த்தெழுதல் என்பது இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நிரூபிக்கிறது.*

*உயிர்த்தெழுதலின் காலையில் கல்லறைக்கு முதலில் வந்தவர்களில், கிறிஸ்துவின் உடலுக்கு அபிஷேகம் செய்வதை முடித்துவைக்க வந்திருந்த பெண்கள் இருந்தனர். மகதலேனா மரியாள் மற்ற பெண்களை விட்டுப் புறப்பட்டு, பேதுருவையும் யோவானையும் எதிர்கொண்டாள் என்று காணப்படுகிறது. மரியாளின் பயத்தைக் கேட்ட அந்த இரண்டு அப்போஸ் தலர்களும் ஆராய்ந்து பார்ப்பதற்காகக் கல்லறையினிடத்திற்கு ஓடினர். கல்லறைக்குள் கண்ணோக்கியபோது விசுவாசித்ததாகப் பிற்பாடு யோவான் கூறினார். முன்னதாக, அவர் எதை விசுவாசிப்பது என்று அறியாதவராகப் பேதுருவுடன் தோட்டத்திற்குள் பிரவேசித்தார். பின்பு கல்லறைக்குள் இருந்தது என்ன என்பதை அவர் கண்டார். இங்கு யோவானின் விவரம் தரப்படுகிறது:*

> *சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில்*

*சுற்றியிருந்த சீலை மற்றச்சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் [அதாவது, யோவானும்[2]] அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு[3] விசுவாசித்தான் (யோவா. 20:6-8).*

*விசுவாசத்தை உண்டாக்கிய எதனை யோவான் கண்டார்? அவர், "பிணத்தைச் சுற்றியிருந்த துணிகள் அங்கு கிடந்ததைக் கண்டார், மற்றும் தலையில் இருந்த முகத்தை மூடிய துணியானது ... தனியே ஒரு இடத்தில் சுருண்டுகிடந்தது." இயேசுவின் உடலை மனிதர்கள் அவசரமாக எடுத்துக் கொண்டு போயிருந்தால்,[4] அவர்களுக்குத் துணிகளை அகற்றுவதற்கும், முகத்துணியை நேர்த்தியாக மடித்து வைப்பதற்கும் நேரம் கிடைத்திருக் காது. யோவான் கண்ட விஷயமானது, மனித முயற்சிகளுக்கு ஒத்துவராத தாக இருந்தது, ஆனால் தெய்வீக இடையீட்டுடன் ஒத்துப் போவதாக இருந்தது. அது, இயேசுவால் அடிக்கடி முன்னுரைக்கப்பட்டிருந்த உயிர்த் தெழுதலுடன் சீர்பொருந்தியதாக இருந்தது (மத். 16:21; 17:23; 20:19; மாற். 8:31; 9:31; 10:34; லூக். 9:22; யோவா. 2:19).*

*ஆதாரத்தைக் கவனத்துடன் உற்றுநோக்க நீங்களும் நானும் நேரம் எடுத்துக்கொண்டால், யோவானுக்குள் உண்டானது போலவே நமக்குள்ளும் விசுவாசம் உண்டாகும். இயேசு மரித்தோரில் இருந்து உயிர்ப் பிக்கப்பட்டார் என்பதை விசுவாசிப்பதற்குக் காரணங்கள் ஏராளமாக உள்ளன. எடுத்துக்காட்டாக, அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரைக் கண்டிருந்த நூற்றுக்கணக்கானவர்களின் சாட்சியங்களை நாம் கொண்டிருக்கின்றோம் (1 கொரி. 15:4-8).*

*இயேசுவின் சீஷர்களுக்குள் ஏற்பட்டிருந்த மாற்றம் என்பது ஒரு நிரூபணமாக உள்ளது. கிறிஸ்து கைது செய்யப்பட்ட மற்றும் விசாரிக்கப் பட்ட வேளைகளில் அவரது பின்பற்றாளர்களின் நடக்கை பற்றி எவரொரு வரும் மனப்பதிவைக் கொண்டிருக்க மாட்டார். அவர்கள் தைரியமா யிருப்பதைத் தவிர வேறு எப்படியும் இருந்தனர். ஒன்று, அவர்கள் தங்கள் உயிருக்குப் பயந்து ஓடியிருந்தனர் அல்லது அபாயத்திலிருந்து விலகியிருக்க முயற்சி செய்தனர். பேதுரு, இயேசுவை அறிந்திருந்ததை மறுதலிக்கவும் செய்திருந்தார். இருப்பினும், உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அதே மனிதர்கள் இயேசுவை வெளியரங்கமாகவும் தைரியமாகவும் பிரசங்கித்த னர். அவர்களின் உறுதிப்பாடு புதிய ஏற்பாட்டின் பக்கங்கள் யாவற்றிலும் ரீங்காரமிடுகிறது.*

*எதைப் பற்றி அவர்கள் நிச்சயமாயிருந்தனர்? இயேசு உயிருடன் இருந்தார் என்பதே அவர்களின் நிச்சயமாயிருந்தது. இந்த நிச்சயமே அப்போஸ்தலர்களின் வாழ்வை மாற்றியிருந்தது. அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டபோதும், அடிக்கப்பட்டபோதும், கல்லெறியப்பட்ட போதும், கொல்லப்பட்டபோதும்கூட அவர்களின் விசுவாசம் அசைக்கப் படக் கூடாததாக இருந்தது. பலவீனமான, நிலையற்ற மனங்கொண்ட, விசுவாசமற்ற தனிநபர்கள், உலகம் கண்டவர்களிலேயே மிகவும் இயக்கம் வாய்ந்த ஆளுமைத் தன்மை உடையவர்களாயினர். அவர்களின் போதனை*

யானது ரோம அரசு தள்ளாடி, விழும் வரையிலும் அதை அசைத்தது. இந்த மனிதர்களில் ஏற்பட்டிருந்த மாற்றம், உயிர்த்தெழுதல் இன்றி விளக்கப்பட முடியாததாக உள்ளது. அவர்கள் உயிர்த்தெழுந்த கர்த்தரைக் கண்டனர், அது அவர்களின் வாழ்வை என்றென்றைக்குமாக மாற்றியது.

உயிர்த்தெழுதல் என்பது, இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நீண்ட காலத்திற்கு முன்பாகவே நிரூபித்தது, மற்றும் இது இன்றைய நாட்களிலும் அந்த மாபெரும் சத்தியத்தை இன்னமும் அறிவிக்கிறது.

## இயேசுவின் பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது

உயிர்த்தெழுதல் என்பது, சிலுவையில் இயேசுவின் பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டார் என்று அறிவிக்கிறது. கிறிஸ்தவம் சிலுவையை மையங்கொண்டுள்ளது. நாம் "சிலுவையின் மூலமாகத் தேவனுடன்" ஒப்புரவாக்கப்படுகின்றோம் (எபே. 2:16). இயேசுவின் பலியின் மூலமாக, நீதியின் தேவன் திருப்தியாக்கப்பட்டார்,[5] நாம் என்றென்றைக்குமான ஜீவியத்தின் நம்பிக்கையைக் கொண்டுள்ளோம். ஆகவே பவுல், "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் … அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று கூறினார் (1 கொரி. 2:2). ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும், நாம் கர்த்தருடைய பந்தியைச் சுற்றிக் கூடிவரும்போது, அது "கர்த்தருடைய மரணத்தை அறிவிப்பதற்கா"னதாக உள்ளது (1 கொரி. 11:26).

இருப்பினும், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படாதிருந்தால், சிலுவை தனது நோக்கத்தை நிறைவேற்றியதா இல்லையா என்பதைப் பற்றி நாம் நிச்சயமற்றவர்களாக இருப்போம். நமது பாவங்களுக்கான இயேசுவின் பலியைத் தேவன் நிச்சயமாகவே ஏற்றுக்கொண்டார் என்பதை உயிர்த்தெழுதல் அறிவிக்கிறது. இந்தக் கருத்தில், நாம் இயேசுவின் மரணத்தினால் மாத்திரமல்ல, ஆனால் அவரது உயிர்த்தெழுதலினாலும் இரட்சிக்கப்பட்டுள்ளோம். இவ்விதமாக இயேசுவைப் பற்றி, "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" என்று பவுல் கூறினார் (ரோமர் 4:25).

## நாம் இரட்சிக்கப்பட முடியும்

நீங்களும் நானும் இரட்சிக்கப்பட முடியும் என்பது, இயேசுவின் பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டதன் உணர்வெழுச்சிமிக்க விளைவாக உள்ளது! உயிர்த்தெழுதல் என்பது, நாம் பாவ மரணத்திலிருந்து புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப்பட முடியும் என்று அறிவிக்கிறது.

ஒருமுறை இயேசு, ஆவிக்குரிய வகையில் குணமாக்கும் வல்லமை தமக்குள்ளது என்று நிரூபிப்பதற்காக உடல் ரீதியான குணமாக்குதலைப் பயன்படுத்தினார் (மத். 9:6ஐக் காணவும்). அதுபோலவே, இயேசுவின் உடல்

ரீதியான உயிர்த்தெழுதலுக்கும், புதிய ஜீவனுக்கென்று நமது ஆவிக்குரிய உயிர்த்தெழுதலுக்கும் உள்ள உறவை வேதாகமம் வலியுறுத்துகிறது. ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் பின்வருமாறு எழுதினார்:

> மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப் பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 6:4-6).

பவுல் எபேசியருக்கு எழுதியபோது, அவர்களின் மனமாற்றத்தைப் பின்வரும் வார்த்தைகளில் தொகுத்துரைத்தார்: "அக்கிரமங்களில் மரித்தவர் களாயிருந்த நம்மை [தேவன்] கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்" (எபே. 2:5). தேவனுடைய ஆசீர்வாதங்கள் "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே" உள்ளன (எபே. 1:19அ).

## நாம் ஜீவனுள்ள ஒரு இரட்சகரைக் கொண்டுள்ளோம்

நாம் நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கப்பட்ட பின்பு, கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதில் நமக்கு உதவி தேவைப்படுகிறது. உயிர்த்தெழுதல் என்பது, நமக்காக "வேண்டுதல் செய்யும்படிக்கு ... உயிரோடிருக்கிற" (எபி. 7:25) இரட்சகரை நாம் கொண்டுள்ளோம் என்று அறிவிக்கிறது. மரித்துப்போன கொள்கையினிடத்தில் அல்ல, ஆனால் ஜீவனுள்ள ஒரு ஆளுமைத்தன்மையிடத்திலேயே நமது பற்றுறுதி உள்ளது.

இயேசு எப்போதும் நம்முடன் இருப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் (மத். 28:20). நாம் கூடிவருகிறபோது அவர் அங்கிருப்பதாக நமக்கு உறுதியளித்துள்ளார் (மத். 18:20). எபிரெயருக்கு எழுதிய நிருப மானது, அவர் "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடிய" மற்றும் நாம் சோதிக்கப்படுகின்றபோது நமக்கு உதவக்கூடிய "கிருபையும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராக" இருக்கின்றார் என்று நமக்குக் கூறுகிறது (2:17; 4:15; 2:18). அவர் மூலமாக, நாம் "இரக்கத்தையும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையையும் அடைகின்றோம்" (எபி. 4:16).

நாம் இயேசுவின் "மரணத்தின் மூலம், தேவனுடன் ஒப்புரவாக்கப் படுவது" மட்டுமின்றி, நாம் "அவருடைய ஜீவனாலே இரட்சிக்க [வும்] படுகின்றோம்" (ரோமர் 5:10). ஜீவனுள்ள மற்றும் அக்கறையுள்ள ஒரு இரட்சகருக்காகத் தேவனுக்கு நன்றி!

## ஒரு நாளானது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது

*உயிர்த்தெழுதல் என்பது, ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக ஒரு நாளானது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கிறது. நான், "ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக ஒரு நாளானது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடும்போது, தனிப்பட்ட கிறிஸ்தவக் கொண்டாட்டத்திற்காக ஒரு ஆண்டின்போது ஒன்று அல்லது இரண்டு நாட்கள் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளன என்று அர்த்தப்படுத்துவதில்லை (கலா. 4:10ஐக் கவனிக்கவும்). அல்லது நான், பழைய ஏற்பாட்டில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த வாரத்தின் ஏழாம் நாளை (ஓய்வு நாளை) மனதில் கொண்டிருப்பதுமில்லை (யாத். 20:8-11; உபா. 5:12-15).*

*மாறாக நான், ''ஞாயிற்றுக்கிழமை'' என்று நாம் அழைக்கின்ற, வாரத்தின் முதல் நாளைக் குறிப்பிடுகின்றேன். தொடக்க கால சபையார் ஆராதிப்பதற்கென்று - கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிக்கவும் (அப். 20:7), தங்கள் வருமானத்திலிருந்து [காணிக்கை] கொடுக்கவும் (1 கொரி. 16:2) - வாரத்தின் முதல் நாளிலே ஒன்றுகூடினார்கள். இந்த முதல் நாளை "கர்த்தருடைய நாள்" என்று யோவான் அழைத்தார் (வெளி. 1:10).*

*வாரத்தின் முதல் நாள் கிறிஸ்தவர்களுக்கு விசேஷ நாளாக இருந்தது (மற்றும் இருப்பது) ஏன்? ஏனென்றால், அந்த முதல் நாளில்தான் கர்த்தர் உயிர்த்தெழுந்தார். மாற்கு, "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது [பெண்கள்] கல்லறையினிடத்தில் வந்து" என்று நமக்குக் கூறுகின்றார் (மாற். 16:2). அங்கே அவர்களிடம் ஒரு தூதன், "சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம்" என்று கூறினான் (மாற். 16:6). கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில், உதயமாகும் ஒவ்வொரு [வாரத்தின்] முதல் நாளும் "உயிர்த்தெழுதலின் காலை வேளையாக" உள்ளது.*

## நாமும் கூட உயிர்ப்பிக்கப்படுவோம்

*அடுத்ததாக நாம், உயிர்த்தெழுதல் பற்றிய மிகவும் மெய்சிலிர்க்கச் செய்யும் செய்திகளில் ஒன்றிற்கு வருகின்றோம்: ஒரு நாளிலே நமது உடல்களும் கூட, மரித்தோரிலிருந்து எழுப்பப்படும் என்று இது அறிவிக்கிறது! நீண்ட காலத்திற்கு முன்பாக யோபு, "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?" என்று கேட்டார் (யோபு 14:14). "ஆம் - ஏனென்றால் இயேசு உயிர்ப்பிக்கப்பட்டார்!" என்பதே தேவனுடைய பதிலாக உள்ளது. இந்த சத்தியம் 1 கொரிந்தியர் 15ல் உறுதிப்படுத்தப்படுகிறது:*

> *கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில்*

*அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் ... பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம் (வ. 20-26).*

*நாம் "நன்மை" செய்திருந்தால், "ஜீவனை அடையும்படி எழுந்திருப் போம்"; நாம் "தீமை" செய்திருந்தால், "ஆக்கினை அடையும்படியான நியாயத்தீர்ப்புக்காக எழுந்திருப்போம்" (யோவா. 5:29) - ஆனால் நாம் யாவருமே உயிர்ப்பிக்கப்படுவோம். மரணம் என்பது இனியும் ஒரு சுவராக இருப்பதில்லை, ஆனால் அது ஒரு கதவாகவே இருக்கிறது. இது அவ்வாறு உள்ளது என்பதை உயிர்த்தெழுதல் நமக்கு உறுதிப்படுத்துகிறது!*

## தேவன் தமது வார்த்தையின்படி நிலைநிற்கின்றார்

*எல்லா மனிதர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய, இன்னும் ஒரு பொதுவான சத்தியம் குறிப்பிடப்பட வேண்டும்: உயிர்த்தெழுதல் என்பது, தேவன் தமது வார்த்தையின்படி நிலைநிற்கின்றார் என்று அறிவிக்கிறது. பிரசங்கியார்கள் வழக்கமாகக் கூறுவதுபோல், "தேவன் தாம் அர்த்தப் படுத்துவதைக் கூறுகின்றார், தாம் கூறுவதை அர்த்தப்படுத்துகின்றார்!"*

*இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்து அவரது அறிவித்தல்கள், விசேஷ மாக தேவாலயம் குறித்த அவரது மறைபொருளான கூற்றுகள், அவரது உரையைக் கேட்டவர்களின் மனங்களில் ஒரு பதிவை ஏற்படுத்தின: "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: 'இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்' என்றார்"; "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (யோவா. 2:19, 21). இயேசு, காய்பாவின் முன் விசாரணைக்கு நின்றபோது, பொய்ச்சாட்சி சொல்ல வந்த ஒருவன் அந்த முன்னுரைத்தலை மேற்கோள் காண்பித்தான் (மத். 26:61). இயேசு சிலுவையில் தொங்கியபோது, தேவபக்தியற்றவர்கள், "தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள்" என்று கொக்கரித்தனர் (மத். 27:40அ).[6]*

*இயேசுவின் முன்னுரைத்தலை அவரது விரோதிகள் நம்பவில்லை; இருந்தபோதிலும், அது நடைபெற்றது. அவரது உடல் - அவரது பூமிக்குரிய ஆலயம் - சிலுவையில் மரித்தது, மற்றும் மூன்றாம் நாளில் அந்த உடல் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டது. கர்த்தர் ஒரு விஷயம் இப்படியிருக்கிறது என்று கூறுகின்றபோது, அது அப்படியே இருக்கிறது. நீங்கள் அதை விசுவாசிக்க முடியும்!*

### முடிவுரை

*சிலர், உயிர்த்தெழுதலைத் தாங்கள் விசுவாசிப்பதாகக் கூறுகின்றனர் - ஆனால் ஆண்டுக்கு ஒருமுறை அதன்மீது பிரதானமான வலியுறுத்தம் வைக்கின்றனர். அதே வேளையில் அவர்கள், உயிர்த்தெழுதலினால் அறிவிக்கப்பட்ட பின்வரும் சத்தியங்களை மறுதலிக்கின்றனர்:*

- *உயிர்த்தெழுதல் என்பது, இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், அவரது தெய்வீகத்துவத்தை மறுதலிக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, சிலுவையானது தேவனுடைய கோபத்தைத் தணித்தது என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், பாவத்தின் உண்மை நிலையையும் தேவன் பாவிகளைத் தண்டிக்க வேண்டும் என்ற உண்மையையும் மறுதலிக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, நாம் இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் சாயலுக்கு ஒப்பான ஞானஸ்நானத்தில் நமது விசுவாசத்தினால் வழிநடத்தப்படுகையில், நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று அறிவிக்கிறது (கலா. 3:26, 27) - ஆனால் சிலர் ஞானஸ் நானத்தின் அவசியத்தை மறுதலித்திருக்கையில், மற்றவர்கள் ஞானஸ்நானத்தில் இயேசுவை தரித்துக்கொள்ள மறுக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, நமக்காக வேண்டுதல் செய்கின்ற ஒரு ஜீவனுள்ள இரட்சகரை நாம் பெற்றிருக்கின்றோம் என்று அறிவிக்கிறது - ஆனால், தேவன் நமது வாழ்வில் தனிப்பட்ட வகையில் பலப்படுத்துதலை அளிக்கின்றார் என்ற கருத்தைப் பலர் இகழுகின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளானது ஆராதனைக்கென்று ஒதுக்கப்பட்ட விசேஷித்த நாளாக உள்ளது என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், ஆண்டின் ஒரு சில நாட்களுக்கு சபைக்கு வருவதுடன் தங்கள் வருகையை மட்டுப்படுத்திக் கொள்ளுகின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, ஒரு நாளிலே நாமும் உயிர்ப்பிக்கப்படுவோம் என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், உடல் ரீதியான உயிர்த்தெழுதலை மறுதலிக்கின்றனர்.*
- *உயிர்த்தெழுதல் என்பது, தேவன் தமது வார்த்தையின் பின்னால் நிலைநிற்கின்றார் என்று அறிவிக்கிறது - ஆனால் பலர், அந்த வார்த்தையின் போதனைகளை ஏளனம் செய்கின்றனர்.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டனில், யார்க் மின்ஸ்டர் என்ற இடத்தில் இருந்த, 760 ஆண்டுகள் பழமையான கோத்திக் பாணியில் கட்டப்பட்ட மாபெரும் பேராலயத்தின் பழைய விதானம் ஒன்று தீயினால் பேரழிவுக்கு உட்பட்டபோது, இங்கிலாந்து முழுவதும் கவலையில் ஆழ்ந்தது. பழமையான அந்தப் பேராலயம் ஒவ்வொரு ஆண்டிலும் ஏராளமான எண்ணிக்கையிலான பயணிகளைக் கவர்கிறது. தீ விபத்து எவ்வளவு துன்பகரமாயிருந்ததோ அதைவிட, அதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இன்னும் அதிக துன்பகரமானதாக இருந்தது:*

‘‘ரெவரென்டு. டேவிட் ஜென்கின்ஸ்’’ என்ற மனிதர், கன்னிப் பெண்ணிடமிருந்து இயேசு பிறந்ததைத் தாம் நம்பவில்லை என்றும், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று தாம் நம்பவில்லை என்றும் வெளிப்படையாகக் கூறியிருந்தும், அவர் “துர்ஹாம் என்ற இடத்தின் ஆயராக” திருநிலைப் படுத்தப்பட்டார்![7]

*நீங்கள் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கின்றீர்களா? அப்படியானால் அதை அறிவியுங்கள்! பின்பு அதைப் போன்று வாழுங்கள்!*

நீங்கள் உயிர்த்தெழுதலில் விசுவாசம் கொண்டிருந்து, நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தால், நீங்கள் தயங்காதிருப்பீர்கள்.[8] தேவனுடைய வல்லமையானது, அவரது குமாரனின் உயிரற்ற உடலை அடைந்து, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பியது போலவே, நீங்கள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய மனவிருப்பத்துடன் இருந்தால், அவரது வல்லமையும் அன்பும் உங்களுக்குப் புதிய ஜீவனைக் கொடுக்க முடியும்.

---

குறிப்புகள்:

*[1]கர்த்தருடைய இராப்போஜனத்தை இயேசு ஏற்படுத்தியபோது, அது தமது மரணத்தை அறிவித்ததென்று அவர் வலியுறுத்தினார் (1 கொரி. 11:23-26); ஆனாலும், இராப்போஜனத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. வாரத்தின் முதல் நாளில் இயேசு உயிர்த்தெழுந்தபடியால் (மத். 28:1-6), சபையானது - கர்த்தருடைய பந்தியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற திட்டவட்டமான நோக்கத்துடன் - வாரத்தின் முதல் நாளில் கூடிவருகிறது (அப். 20:7; 1 கொரி. 16:1, 2ஐக் காணவும்). [2]பேதுருவுடன் இருந்தவர் “இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷன்” என்று அடையாளப்படுத்தப்படுகின்றார் (யோவா. 20:2), இது யோவான், தம்மைக் குறிப்பிடப் பயன்படுத்திய வழிமுறை என்று பெரும்பாலானவர்கள் நம்புகின்றனர் (யோவா. 13:23; 19:26; 21:7, 20ஐயும் காணவும்). [3]“கண்டு” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது வெறும் கவனித்தல் என்பதை விட அதிகமானதை அர்த்தப்படுத்துகிறது; இது புரிந்து உணருதலைச் சுட்டிக்காண்பிக்கிறது. [4]சிலர் இந்த உரிமைகோருதலை ஏற்படுத்தியுள்ளனர். யோவான் 20:2 மற்றும் மத்தேயு 28:11-15ஐ வாசிக்கவும். [5]வேத வாக்கியங்கள் இதைச் சுட்டிக்காண்பிக்கும் ஒரு வழிமுறையானது பலருக்குப் பழக்கமற்ற “கிருபாதார பலி” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது (1 யோவா. 2:2; 4:10). இப்புத்தகத்தில் இவ்வார்த்தை பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்திற்கு, “இயேசு சிலுவையில் மரிக்க வேண்டியிருந்தது ஏன்?” என்ற துணைப் பாடத்தைக் காணவும். [6]அப். 6:14ல் சனதெரீன் சங்கத்தாரின் கூற்றையும் காணவும்.* [7]This illustration was adapted from Dick Marcear, “It’s Time to Take a Stand,” *Hilltop Reflections*, church bulletin of the Central church of Christ in Amarillo, Texas, 13 April 1986. *[8]ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் பற்றிய வசனப் பகுதியொன்று முன்னதாக மேற்கோள் காண்பிக்கப்பட்டது. ஒருவர் கர்த்தரிடத்திலிருந்து விலகிச் சென்றிருந்தால் அவர் மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தவும் நீங்கள் விரும்பலாம் (யாக். 5:16; அப். 8:22).*